வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 07.10.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 280 பக்கங்கள் : 08

### ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில்

# வாக்கெடுப்பின்றி நிறைவேறியது இலங்கைமீதான புதிய பிரேரணை

ஜெனிவா, ஒக்ரோபர் 07

**ஜெனிவாவில் நடைபெறும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக - இறுதி வரைவாக நேற்று சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை வாக்கெடுப்பு எதுவும் இன்றி நிறைவேற்றப்பட்டது.**



பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் இந்தப் பிரேரணை முன்னர் சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும், திருத்தப்பட்ட இறுதி வரைவு நேற்று சமர்ப்பிக்கப்பட்டு, நேற்றைய தினமே வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரரேணை நிறைவேற்றப்படும் போது இலங்கை அரசாங்கம் வாக்கெடுப்பைக் கோரவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் கடந்த செப்ரெம்பர் 8ஆம் திகதி ஆரம்பமானது.

இந்நிலையில், எதிர்வரும் 8ஆம் திகதியுடன் கூட்டத்தொடர் நிறைவடைகின்றது.

அதற்கு முன்னதாக நேற்று இலங்கை தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் குறித்த பிரேரணை

07

## அரசாங்கம் வலுவடைகிறது

### சொல்கிறார் எஸ்.பி.



கொழும்பு, ஒக். 07

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உலகை வென்று மிகச் சிறப்பாக முன்னேறி வருவதாக முன்னாள் அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜப்பான், சீனா, வியட்நாம் போன்ற நாடுகள் இலங்கைக்கு இந்தப் பயணத்தில் உதவும் என்று நான் நம்புகிறேன். சீன

07

## நாடு முழுவதும் 3,000 மின் தடை

கொழும்பு, ஒக். 07

இந்த நாட்களில் நிலவும் மழை காலநிலை காரணமாக நாடு முழுவதும் சுமார் 3,000 மின் தடைகள் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான மின் தடைகள் பெரிய மரங்கள் விழுந்ததால் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில், தொடர்ச்சியான மின்சார விநியோகம் காரணமாக மின் தடைகளை மீட்டெடுப்பதில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## ஈஸ்டர் தாக்குதல் சூழ்ச்சி; பிள்ளையானுக்கு தொடர்பு

### அமைச்சர் ஆனந்த விஜேபால

கொழும்பு, ஒக். 07

ஈஸ்டர் தாக்குதலுக்கான சூழ்ச்சிகளுக்கு சிவநேசதுரை சந்திரகாந்தன் என்ற பிள்ளையானுக்கு தொடர்புகள் இருப்பதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை

07

## அரசியல் தலையீட்டால் சுயாதீனம் இழந்துள்ள பொலிஸ் ஆணைக்குழு

### தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 07

அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்தின் ஊடாக பொலிஸ் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு சுயாதீனமாக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று முழுமையான அரசியல் தலையீட்டினால் பொலிஸ் ஆணைக்குழு அதன் சுயாதீனத்தன்மையை இழந்துள்ளது. ஜே. வி. பி. செயற்பாட்டாளரான பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின்

07

## எங்களுடைய மக்கள் தொடர்ந்து போராடுவர்!

### சிங்கள பௌத்த ஆட்சியாளர்களை நம்பமாட்டோம் என்கிறார் சிவாஜி

யாழ்ப்பாணம், ஒக். 07

திஸ்ஸ விகாரைக்கு எதிராக தொடர்ந்தும் எங்களுடைய மக்கள் போராடுவார்கள். நாங்கள் இந்த சிங்கள பௌத்த ஆட்சியாளர்களை நம்ப மாட்டோம் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - வலிகாமம், தையிட்டி பகுதியில் அமைந்துள்ள, திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்றும் போராட்டம் ஒன்று

07

## இலங்கை அகதிகளுக்கு தமிழகத்தில் 772 வீடுகள்!

சென்னை, ஒக். 07

இந்தியாவின் - தமிழ்நாட்டில் ஏதிலிகளாக வாழ்கின்ற இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

சென்னையிலுள்ள கட்சி அலுவலகத்தில், காணொளி ஊடாக் குறித்த வீடுகளை முதலமைச்சர் நேற்று திறந்து வைத்தார்.

இதன்படி, தூத்துக்குடி, திருவண்ணாமலை,

07

## இலங்கையில் ஒவ்வொரு நாளும் 100 புற்றுநோயாளர் அடையாளம்

கொழும்பு, ஒக். 07

இலங்கையில் ஒவ்வொரு நாளும் சுமார் 100 புதிய புற்றுநோயாளர்கள் கண்டறியப்படுவதாகவும், ஆண்டு தோறும் கிட்டத்தட்ட 35 ஆயிரம் பேர் பாதிக்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், புற்றுநோய் சிகிச்சை சுகாதாரத் துறையின் மீது பெரும் சுமையை

07

## மகிந்தவின் பாதுகாப்புக்கு உதவவுள்ள இரண்டு நாடுகள்?

கொழும்பு, ஒக். 07

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக உதவத் தயாரென பிரதான இரண்டு நாடுகள் உறுதிமொழி வழங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகிந்த பயன்படுத்திய புல்லட் புரூவ் எனப்படும் குண்டுகள் துளைக்காத வாகனங்களை அரசாங்கம் மீளப் பெற்றுள்ள நிலையில், அப்படியான வாகனங்களை மகிந்தவுக்கு வழங்க முடியுமென இரு நாடுகள் மகிந்த விடம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

07

## மன்னார் காற்றாலை திட்டத்தை செயல்படுத்தும் மணல் ஆய்வுக் குழு மக்களினால் விரட்டியடிப்பு!



மன்னார், ஒக். 07

மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவிலுள்ள பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள பேசாலை தெற்கு கடற்கரைப் பகுதியில் நேற்று மாலை காற்றாலைத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான மணல் ஆய்வு முன்னெடுக்க குழு ஒன்று வருகை தந்த நிலையில் மக்களின் பாரிய எதிர்ப்புக்கு மத்தியில் அந்தக் குழு அங்கிருந்து வெளியேறியது.

பேசாலை கிராமத்திற்கு உட்பட்ட தெற்கு கடற்கரைப் பகுதியில் காற்றாலைத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான மணல் ஆய்வு முன்னெடுக்க இயந்திரங்களுடன் குழு ஒன்று வருகை தந்ததை

07

## உதய கம்மன்பில, விமலை எச்சரித்த பிரதி அமைச்சர்

கொழும்பு, ஒக். 07

உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ போலியான விடயங்களை சமூகமயப்படுத்த முயற்சிக்கும்போது அந்த விடயங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு முன்னிலையாக வேண்டும். இனவாதத்தை முன்னிலைப்படுத்தியே இவர்கள் செயற்படுகிறார்களென தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையிட்டியில் நேற்றும் போராட்டம்




யாழ்ப்பாணம், ஒக். 07

வலிகாமம் வடக்கு, தையிட்டிப் பகுதியில் அமைந்துள்ள, திஸ்ஸ விகாரைக்கு எதிராக, நேற்றைய தினமும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தையிட்டி திஸ்ஸ விகாரை, சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அதனை அங்கிருந்து அகற்றுமாறு வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், நேற்றைய தினமும் எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டது.

பதாகைகளை மற்றும் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியவாறு பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ-03-05)

# நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய கப்பல் திருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஒக். 07

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் 7 ஆம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை ஆலயத்தின் வரலாற்றை கூறும் கப்பல் திருவிழா நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும் வியாழக்கிழமை சப்பை ரதத் திருவிழாவும் வெள்ளிக்கிழமை சமுத்திர தீர்த்தோற்சவமும் சனிக்கிழமை கேணித் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (அ)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஒக். 07

வவுனியா- இராசேந்திரன் குளம் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் மரணமடைந்ததுடன், இருவர் காயமடைந்தனர் என நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது.

வவுனியா, இராசேந்திரன் குளம் பகுதியில் இருந்து நெளுக்குளம் நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றில் 3 இளைஞர்கள் பயணித்துள்ளனர். குறித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் இராசேந்திரன்குளம் பாடசாலைக்கு அருகில் உள்ள பஸ் தரிப்பு நிலையத்துடன் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் மரணமடைந்தார். மற்ற இருவரும் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் சாம்பல் தோட்டம் பகுதியைச் சேர்ந்த கோபால்ராஜ் நிலக்சன் (வயது 18) என்பவரே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-10)

# காணி உறுதி மோசடி குற்றச்சாட்டு; யாழில் பெண் சட்டத்தரணி கைது!

யாழ்ப்பாணம், ஒக். 07

யாழ்ப்பாணத்தில் காணி உறுதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான பெண் சட்டத்தரணியை 10 இலட்ச ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் செல்ல அனுமதித்த மன்று, அவருக்கு வெளிநாட்டு பயண தடையும் விதித்துள்ளது.

யாழ்ப்பாணம் பொம்மை வெளி பகுதியில் காணி ஒன்றின் உறுதி எழுதியதில் மோசடி இடம்பெற்றமை தொடர்பிலான விசாரணைகளின் அடிப்படையில் குறித்த காணியின் உறுதி முடிப்பை நிறைவேற்றிய சட்டத்தரணி நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சட்டத்தரணியை விசாரணைகளின் பின்னர், பொலிஸார் மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நீதிவானின் முன்னிலையில் முற்படுத்தியவேளை, கைதான சட்டத்தரணியை 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் செல்ல அனுமதித்த மன்று, வெளிநாட்டு பயணத் தடையை விதித்துள்ளது.

அதேவேளை, குறித்த சட்டத்தரணியின் வீட்டுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் அத்துமீறி நுழைந்து எவ்விதமான நீதிமன்ற கட்டளையும் இன்றி தேடுதல் நடத்தி அடாத்தாக நடந்து கொண்டதாகவும், பொலிஸாரின் குறித்த செயல்களை கண்டித்து இன்று செவ்வாய்க்கிழமை சட்டத்தரணிகள் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற காணி மோசடி வழக்குகளில் சில சட்டத்தரணிகள் நேரடியாக தொடர்புபட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்கு தாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பொலிஸ் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (அ)

# வடக்கு வீதி அபிவிருத்தியில் அரசு ஆர்வம்

கொழும்பு, ஒக். 07

வடக்கு மாகாணத்தில் முதல் கட்டமாக 299 மில்லியன் ரூபாய் செலவில் வீதி அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், 800 மில்லியன் ரூபா செலவில் குறிகட்டுவான் இறங்குதுறையும் மறுசீரமைக்கப்பட வுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் வீதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில், பொதுமக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்தி இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதனிடையே, நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில், முதல் தடவையாக எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது என அமைச்சர் கூறினார். (அ)

# உலக சுற்றுலா தின நிகழ்வு நேற்று கிளிநொச்சி பசுமை பூங்காவில்

கிளிநொச்சி, ஒக். 07

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகமும் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த உலக சுற்றுலா தின நிகழ்வு, நேற்று கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் இடம்பெற்றது.

சுற்றுலா தினத்தின் நிலைபேறான மாற்றம் என்ற தொனிப்பொருளில், நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வுக்கு முன்னதாக, பண்பாட்டுப் பவனி, காக்கா கடைச்சந்தியில் இருந்து பசுமைப்பூங்கா வரை முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் அ.பத்திநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் பங்கேற்றார்.

கௌரவ விருந்தினராக கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் பங்கேற்றதுடன், சிறப்பு விருந்தினராக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நளாயினி இன்பராஜ் பங்கேற்றார். (அ)

# கார் மோதி 3 பெண்கள் பலி

கொழும்பு, ஒக். 07


கம்பளை, தொழுவ பகுதியில் கார் மோதியதில் 3 பெண்கள் உயிரிழந்தனர்.

குறித்த மூவரும் வீதியைக் கடக்க முற்பட்டபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த கார் சாரதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துக் குறித்து கம்பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (அ)

# கானல் நீதி எனும் உரையாடல் யாழ். தந்தை செல்வா அரங்கில்



யாழ்ப்பாணம், ஒக். 07

திருகோணமலையில் 2009 ஆம் ஆண்டு, இராணுவத்தால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களுக்காக நீதி கோரி போராடிய வைத்தியர் மனோகரனையும் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களையும் நினைவு கூரும் "கானல் நீதி" எனும் தலைப்பிலான உரையாடல் நேற்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் இடம்பெற்றது.

வைத்தியர் மனோகரின் உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன், அரசியல் செயற்பாட்டாளர் இ.ரஜீவ்காந், பத்திரிகையாளர் அ.நிக்ஸன், யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியல் தலைவர் தி.விக்னேஸ்வரன், ஐக்கிய சேசலிஷக் கட்சியைச் சேர்ந்த சட்டத்தரணி சிறீநாத் பெரேரா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன், மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்றனர். (அ)



வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திருவிழாவின் 16ஆம் திருவிழாவான நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் கற்கோவளம் கடற்கரையில் இந்து சமுத்திரத்தில் தீர்த்தோற்சவம் இடம்பெற்றது.

(படங்கள் - சி. தில்லைநாதன், த. காண்டீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
07.10.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசாங்கங்கள் மட்டுமல்ல காரணம்

“மாகாண சபைகள் தேர்தல் இழுத்தடிப்புக்கு உள்ளூராட்சி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்கொண்ட பின்னடைவே காரணம்”, என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். அவர் கூறுவதை முற்றிலுமாக நிராகரிக்க முடியாது. அதில், உண்மையிருக்க அதிக வாய்ப்புண்டு. ஏனெனில், உள்ளூராட்சித் தேர்தலில் தேசியளவில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பின்னடைவைச் சந்தித்திருந்தது. அநுர அலையொன்று வீசுவதாக கூறப்பட்டபோதிலும்கூட, அரசாங்கம் எதிர்பார்த்தளவுக்கு சிங்கள மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் எழுச்சியுறவில்லை.

பாராளுமன்றத் தேர்தலில் வாக்களித்த பெருமளவான மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் பக்கமாக செல்லவில்லை. பிறிதொரு தேர்தலை எதிர்கொண்டால் அது எந்தளவுக்கு தங்களுக்கு சாதகமாக வருமென்னும் அச்சம் அரசாங்கத்துக்கு நிச்சயம் இருக்கும். ஆனால், மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதிலுள்ள தயக்கத்துக்கு இதற்கப்பாலும் காரணமுண்டு.

மாகாண சபைகள் முறைமையை பாதுகாக்கவேண்டும் என்னும் எண்ணம் உண்மையிலேயே ஜே. வி. பி.யிடம் இருக்கிறதா என்னும் கேள்வியுமுண்டு. ஏனெனில், இன்றுவரையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வின் அடிப்படையாக இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்திவரும் அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜே.வி.பி. உத்தியோகபூர்வமாக எதனையும் கூறவில்லை. அது, தொடர்பில் பேசப்படும் சந்தர்ப்பங்கள் அனைத்திலும் ஆழ்ந்த அமைதியைக் கடைப்பிடிக்கிறது.

ஆனால், இங்கு தமிழர் பக்கத்திலுள்ள விடயம் தொடர்பிலும் நாம் உற்றுநோக்காமல் விடமுடியாது. மாகாண சபைகள் தேர்தல் நடைபெறாமைக்கு அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் எதற்காக மாகாண சபைகள் தேர்தலை நடத்துமாறு போர்க்கொடி உயர்த்தவில்லை? அதற்கான காரணம் என்ன? தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அச்சத்தின் காரணமாக தேர்தலை நடத்துவதற்கு பின்னிற்கிறது என்பது உண்மையானால் ரணில்- மைத்திரி அரசாங்கம் எதற்காக மாகாண சபைகள் தேர்தலைப் பிற்போட்டது? சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைகள் தேர்தலைப் பிற்போடும் அரசாங்கத்தின் முடிவை ஏன் ஆதரித்திருந்தது?

உண்மையில், மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு மிகவும் சாதகமான அரசியல் சூழல் ரணில் - மைத்திரி காலத்தில் இருந்தது. அதற்குமப்பால்,அரசமைபபின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான வாய்ப்பு ஒப்பீட்டடிப்படையில் மிகவும் சாதகமாக இருந்தது. ரணிலும் மைத்திரியும் முற்றிலும் ஆதரவான நிலையில் இருந்தனர். குறிப்பாக, மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்களுக்குக் கடமைப்பட்டவர் என்னும் மனோநிலையில் இருந்தார்.

மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையில் மோதல் ஏற்படும்வரையில், நிலைமைகள் மிகவும் சாதகமாக இருந்தன. சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பும் மைத்திரியுடனும் ரணிலுடனும் மிகவும் நெருக்கமான உறவிலிருந்தது. ஒருவகையில் அன்றையகாலம் என்பது சம்பந்தன் - ரணில் - மைத்திரி கூட்டின் தேனிலவு காலமாகும் ஆனாலும், மாகாண சபைகள் தேர்தல் நடைபெறவில்லை என்றால் இதற்கான பொறுப்பை மற்றவர்கள்மீது சுமத்திவிடமுடியுமா? அரசாங்கங்கள் அனைத்துமே அவற்றின் நலன்களின் அடிப்படையில்தான் காய்களை நகர்த்தும். ஆனால், தேவையுள்ள தமிழர் தரப்புகள்தான் விடயங்களை முடிந்தவரையில் சாதகமாகப் பயன்படுத்தி, பெறக்கூடியவற்றைப் பெறவேண்டும்.

# புதிய கல்வி சீர்திருத்தங்களால் ஆசிரியர்களுக்கு பாதிப்பில்லை

## கூறுகிறார் பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஒக். 07

புதிய கல்வி சீர்திருத்தங்களால் ஆசிரியர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்த பட்டறையில் பங்கேற்ற போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடியதன் பின்னரே தீர்மானம் எடுக்கப்படும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இதனிடையே, புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்து கல்வி அதிகாரிகளிடம்கூட சரியான புரிதல் இல்லை என கல்வித் தொழிற்துறையினர் சங்கத்தின் தலைவர் உலபனே சுமங்கல தேரர் குறிப்பிட்டார்.

அத்துடன், புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல்களின் பின்னர் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமென அவர் கூறினார்.

(அ)

# 8 ஜனாதிபதி மாளிகைகளுக்கு ஒரு வருட செலவு ரூ. 8 கோடி

கொழும்பு, ஒக். 07

ஜனாதிபதி செயலகத்தின் கடந்த 2024 ஆம் ஆண்டுக்கான பராமரிப்பு பற்றிய செலவுகள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய, நாட்டின் எட்டு ஜனாதிபதி மாளிகைகளைப் பராமரிப்பதற்காகக் கடந்த 2024 ஆம் ஆண்டில் மாத்திரம் 8 கோடியே ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 422 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் உள்ள கணக்காய்வு அறிக்கையில் இந்தத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மாளிகைகள் யாழ்ப்பாணம், அநுராதபுரம், கண்டி, மஹியங்கனை, நுவரெலியா, கதிர்காமம், பெந்தோட்டை, கொழும்பு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளன.

இந்த எட்டு மாளிகைகளிலும் 392 பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் 16 சிவில் ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட் டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# சந்தையில் தேங்காயின் விலை 6.8 சதவீதம் அதிகரித்துள்ளது

கொழும்பு, ஒக். 07

வாராந்த தேங்காய் ஏல விற் பனையில் நாட்டின் சராசரி தேங்காய் விலை 6.8 வீதம் உயர்வடைந்துள்ளதாகத் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ஆயிரம் தேங்காய் களின் சராசரி விலை ஒரு இலட் சத்து 38 ஆயிரத்து 582 ரூபாயா கப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இருப்பினும், வாராந்த தேங்காய் ஏல விற்பனையில், பதிவு செய்யப்பட்ட அதிக பட்ச அல்லது குறைந்தபட்ச விலை குறிப்பிடப்படவில்லை.

இதனிடையே, உள்நாட்டு சந்தையில் பெரிய தேங்காய் ஒன்றின் மொத்த விலை 180 முதல் 190 ரூபாயாகவும சிறிய தேங்காய் ஒன்றின் மொத்த விலை 150 முதல் 170 ரூபாயாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(அ)

# ஜோன்ஸ்டன் மறுப்பு

கொழும்பு, ஒக். 07

சம்பத் மனம்பேரி தனது ஒருங்கிணைப்புச் செயலாளராக பணியாற்றினார் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மறுத்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற குருநாகல் மாவட்ட அமைப்பாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே, இந்தக் குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய்யானவை மற்றும் அவதூறானவை என்று அவர் கூறினார்.

இவ்வாறான குற்றச்சாட்டுகளை பரப்புபவர்களுக்கு எதிராக அதிகபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சம்பத் மனம்பேரி என்பவர், “ஐஸ்“ எனப்படும் போதைப் பொருள் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் அடங்கிய இரண்டு கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு தடுத்து வைக்ககப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# 2020இற்கு பின் பிறப்பு வீழ்ச்சி!

கொழும்பு, ஒக். 07

2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு நாட்டின் பிறப்பு எண்ணிக்கையானது 80 ஆயிரத்து 945ஆல் குறைவடைந்துள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.


எனினும், கடந்த ஆண்டு கொழும்பில் அதிக பிறப்புகள் பதிவாகின. 1,200 ஆண் குழந்தைகளும் 1,246 பெண் குழந்தைகளும் அங்கு பிறந்துள்ளன.

அத்துடன், மிகக்குறைந்த பிறப்புகள் முல்லைத்தீவில் பதிவாகியுள்ளன. இங்கு 50 ஆண் குழந்தைகளும் 50 பெண் குழந்தைகளுமாக 100 குழந்தைகள் மாத்திரமே பிறந்துள்ளன.

2020 ஆம் ஆண்டு நாட்டின் பிறப்பு எண்ணிக்கை 301,706 ஆகவும் கடந்த ஆண்டு பிறப்புகளின் எண்ணிக்கை 220,761 ஆக பதிவாகியுள்ளன.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**இடபம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும்

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள் உடனே உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். வேலைச்சுமை நாள்.

**சிம்மம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். தாயாரின் உடல்நலம் சீராகும். கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**கன்னி**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும்

**துலாம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
அரசால் ஆதாயம் உண்டு. துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**மகரம்**
குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னைகள் விலகும். மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும்.

**மீனம்**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். பிள்ளைகளின் பிடிவாதத்தை அனுசரணையான பேச்சால் சரி செய்யுங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும்.

# தேசிய, மத ஒற்றுமைக்கான சகாப்தம் உருவாக்கப்பட்டுள்ளது

## அமைச்சர் பிமல் யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 07

தேசிய, மத ஒற்றுமைக்கு உறுதியளிக்கும் அரசாங்கத்தின் கீழான ஒருங்கிணைந்த முன்னேற்றத்தின் புதிய சகாப்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக நெடுந்தீவில் எரிபொருள் நிலையத்தை நிறுவுவதற்கான ஒப்பந்தம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் எட்டப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் கடற்படையின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத் தப்படவுள்ளது. இதன் மூலம், நெடுந்தீவு வாழ் மக்கள் கொழும்பிலுள்ள விலையிலேயே எரிபொருளை பெற இது வழிவகுக்கும்.

தற்போது, இந்தத் தீவிலுள்ள மின்பிறப்பாக்கிக்கு எரிபொருளைக் கொண்டு செல்ல சுமார் ஏழு மணிநேரம் எடுக்கிறது. புதிய எரிபொருள் நிரப்பும் நிலையம் செயல்படத் தொடங்கியதும் 45 நிமிடங்களுக்குள் எரிபொருளை வழங்கக்கூடிய வசதி கிடைக்கும். இந்தத் திட்டம் இரண்டு கட்டங்களாக பூர்த்தி செய்யப்படும். முதல் கட்டத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 5 கோடி ரூபாயை முதலீடு செய்யும்.

தேசிய, மத ஒற்றுமைக்கு உறுதியளிக்கும் அரசாங்கத்தின் கீழான ஒருங்கிணைந்த முன்னேற்றத்தின் புதிய சகாப்தத்தை இந்த வளர்ச்சி குறிக்கிறது. நயினாதீவு அம்மன் கோவில் வரை மக்கள் சமாதானமாகவும் ஒரே படகிலும் ஒன்றாகப் பயணிக்கக்கூடிய ஒரு காலத்தை இந்த நிர்வாகம் உருவாக்கியுள்ளது - என்றார். (ஐ)

# தமிழ் இனப்பிரச்னை தீர்வுக்கு சர்வதேசம் ஒருபோதும் உதவாது

## அர்ச்சுனா எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஒக். 07

ஒருபோதும் சர்வதேசம் தமிழ் மக்களின் இனப்பிரச்னை தீர்வுக்கு உதவி செய்யாது என்று யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ. அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

"ஏனைய அரசியல்வாதிகள் போன்று இராஜதந்திர பணிமனைகள் முன்பாக நின்று புகைப்படம் எடுத்து வெளியிட்டு தமிழ் மக்களை ஏமாற்றும் நபர் நான் இல்லை. எந்த இராஜதந்திர பணிமனைகளாக இருந்தாலும் இலங்கை அரசாங்கத்தை மீறிச் செயல்படாது. வெறுமனே வெளிநாடுகள் பொருளாதாரத்துக்கு மட்டுமே தமது உதவிகளை வழங்கும். சர்வதேசம் தீர்வைப் பெற்றுத் தரும் என்பதில் எனக்கு நம்பிக்கை குறைவாகவே உள்ளது என்றும் கூறினார்.

மேலும், "கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சிறீதரனும் இணைந்து கட்சி ஒன்றை ஆரம்பிக்கும் தறுவாயில் உள்ளனர். அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ் அரசுக் கட்சி ஒவ்வொரு அரசாங்கமும் விரும்பியது போல் நடந்து கொள்கிறது. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை பொறுத்தவரையில் தமிழ் அரசுக் கட்சியை பிளவுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளார். தமிழ் அரசுக் கட்சியின் உடைவுக்கு சிறீதரன் பயன்படுத்தப்படுகிறார்", - என்றும் தென்னிலங்கை வானொலி ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையம் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 07

1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் 35 ஆண்டுகளுக்குப் பின்னர் உதயசூரியன் சனசமூக நிலையம் மீள் உருவாக்கம் செய்யப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

காங்கேசன்துறை பொதுச் சந்தை வீதியில் உள்ள உதயசூரியன் சனசமூக நிலையத்தின் வளாகத்தில் புதுப்பொலிவுடன் சனசமூக நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் எஸ். சுகிர்தன் கலந்துகொண்டு நாடாவெட்டி சனசமூக நிலைய கட்டடத்தை திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினராக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யூலியன் மற்றும் உதயசூரியன் சனசமூக நிலைய நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-03)

# பொருளாதார நெருக்கடி, உளவியல் தாக்கம் குறித்து கலந்துரையாடல்

வவுனியா, ஒக். 07

பொருளாதார நெருக்கடிகளும் அதனால் ஏற்படுகின்ற உளவியல் தாக்கங்களால் அதிகரிக்கும் தற்கொலைகள் தொடர்பிலும் வவுனியா சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் திறந்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் முன்னாள் உபபீடாதிபதி ந. பார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வவுனியா பொது மருத்துவமனையின் உளநல மருத்துவர் சி. சுதாகரன் கருத்துரைகளை வழங்கினார்.

இந்தக் கருத்துரைகளுக்குப் பின்னர் பொதுமக்களிடமிருந்து தற்போதைய சூழலில் பொருளாதார நெருக்கடிகளால் ஏற்படுகின்ற தாக்கங்கள், அதனால்

ஏற்படக்கூடிய உளநல பிரச்னைகள் மற்றும் தற்கொலைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாடல்களும் நடைபெற்றன.

குறித்த கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் உட்பட பல பொதுமக்களும் கலந்து கொண்டனர். (எ-10)

# விபத்தில் முதியவர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக். 07

பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு முதியவர்கள் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இராணுவ வாகனம் ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி நோக்கி சென்று கொண்டிருந்தது. இதன்போது, இராணுவ வாகனத்தின் பின்னால் வந்த லொறி ஒன்று அந்த வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டவேளை பலாலி பக்கம் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு முதியவர்கள் படுகாயமடைந்தனர். விபத்து சம்பவம் குறித்த விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் செலவுக்கு பாரிய அளவு நிதி ஒதுக்கீடு!

## விளக்கம் கோருகிறார் தயாசிறி எம்.பி.

கொழும்பு, ஒக். 07

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2026ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலத்தில் ஜனாதிபதிக்கான செலவுகளுக்காக 11.37 பில்லியனை ஒதுக்கியிருக்கின்றார். இது 2024இல் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான செலவை விட 72 வீத அதிகரிப்பாகும்.**

இவ்வாறு பாரியளவு நிதி ஒதுக்கீட்டுக்கான காரணத்தை ஜனாதிபதியும், அரசாங்கமும் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2024ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான செலவுகள் 6.6 பில்லியன் ரூபாவாகும்.

அது 2025இல் அநுரகுமார திஸாநாயக்கவின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தில் 2.9 பில்லியன் வரை குறைக்கப்பட்டது.

அது தொடர்பில் அரசாங்கத்தால் பாரிய பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2026ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் அது 11.37 பில்லியனாக உயர்வடைந்துள்ளது.

2024இல் ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஒதுக்கப்பட்டிருந்த நிதியை விட இது 72 சத வீத அதிகரிப்பாகும்.

ஆட்சியைப் பொறுப்பேற்ற பின்னர் சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு தமக்கு குறிப்பிட்டளவு நிதி தேவை ஏற்படும் என்பதை இப்போதாவது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க புரிந்து கொண்டிருப்பார் என நம்புகின்றோம்.

2024இல் பிரதமருக்கான நிதி ஒதுக்கீடு 1.15 பில்லியனாகும்.

2025இல் இது 1.17 பில்லியனாக அதிகரிக்கப்பட்டது.

2026க்காக நிதி ஒதுக்கீடு 0.9 பில்லியனாகக் குறைவடைந்துள்ளது.

அதற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆனால் ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடு ஓராண்டுகள் சுமார் 6 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஜனாதிபதியின் பதில் என்ன? கடந்த காலங்களில் ஜனாதிபதிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டபோது அவற்றை கடுமையாக விமர்சித்த ஜே.வி.பி.யினர் இப்போதாவது யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமது சட்டைப் பைகளை நிரப்பிக் கொள்வதற்காக எந்தவொரு ஜனாதிபதியும் நிதியை ஒதுக்கிக் கொள்வதில்லை.

அது மாத்திரமின்றி கடந்த காலங்களில் நிதி அமைச்சு ஜனாதிபதியின் கீழிருப்பது முற்றிலும் தவறு எனவும் இவர்கள் கூறினர்.

ஆனால் இன்று என்ன நடந்திருக்கிறது? பொருளாதாரம் தொடர்பில் நிபுணத்துவம் அற்ற ஜனாதிபதி அநுரகுமார தற்போது நிதி அமைச்சை தன்வசப்படுத்தி, தனக்கேற்றவாறு நிதி ஒதுக்கீடுகளை செய்து கொண்டிருக்கின்றார்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் நிச்சயம் பதிலளிக்கவேண்டும்-என்றார். (அ)

# மின்சார சபை பொறியாளர்கள் சங்கம் நேற்று முதல் தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, ஒக். 07

இலங்கை மின்சார சபை பொறியாளர்கள் சங்கம் நேற்று முதல் தனது தொழிற்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்தப் போவதாக தெரிவித்துள்ளது.

அதன்படி, மின்சார சபையின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் நேற்று முதல் நிறுத்தப்படும் என அதன் செயற்குழு உறுப்பினர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்தார்.

தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், எதிர்காலத்தில் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை மீண்டும் ஒரு முறை மின்சார கட்டணத்தை அதிகரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக மின்சார பயனாளிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை புதிய ஊழியர் சங்கமும் இந் நடவடிக்கைக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

மேலும் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டால், அது கட்டுமானத் துறைக்கு கடுமையான சிக்கலை ஏற்படுத்தக்கூடும் என தேசிய கட்டுமானத் தொழிலாளர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. (அ)

# வாகன விபத்துக்களில் இரண்டு பேர் உயிழப்பு!

கொழும்பு, ஒக். 07

நாட்டின் இருவேறு பகுதிகளில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் இருவர் உயிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிங்கிரிய பொலிஸ் பிரிவின் தலுபொத்த வீதியில் குருலுவெல பகுதியில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்சார தூணில் மோதியதில் படுகாயமடைந்த இருவர் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் நாகொல்லாகொடவைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் என தெரியவந்துள்ளது.

மாத்தறை-திஸ்ஸமஹாராம வீதியில் தங்தெனிய பகுதியில் முச்சக்கர வண்டி உன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எதிர்திசையில் வந்த பேரூந்தில் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். மொரகொல்லாகமவைச் சேர்ந்த 51 வயதான பெண்ணே குறித்த விபத்தில் உயிரிழந்தார்.

விபத்து தொடர்பாக முச்சக்கர வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஹங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# போதைப்பொருளற்ற நாட்டை உருவாக்குவதே எமது நோக்கம்

## பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன

கொழும்பு, ஒக். 07

போதைப்பொருள், பாதாள உலகக்குழு மற்றும் ஊழல் மோசடி இல்லாத நாட்டை எதிர்காலத்தில் உருவாக்குவதே தேசிய மக்கள் சக்தியின் நோக்கம் என கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

படுவஸ்நுவர பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போதைப்பொருள் பாவனை எவ்வாறு அதிகரித்துள்ளது என்பதை பார்க்கிறீர்கள் தானே. இப்படியே சென்றால் நம் பிள்ளைகளின் எதிர்காலம் பாதிப்படையும். தம்புள்ளையில் எனக்கு தெரிந்த குடும்பம் ஒன்று உள்ளது. அவர்களின் வீட்டுக்கு அருகில் உள்ள மற்றொரு வீட்டில் தாய் தந்தை இல்லாத குடும்பம் ஒன்று உள்ளது. அந்த வீட்டில் ஒரு கதிரைக் கூட இல்லை. சுவர்கள் மாத்திரமே காணப்படுகின்றன. அந்த அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஒரேயொரு மகன் இருக்கிறார். அந்த அம்மாவும் அப்பாவும் அந்த வீட்டை விட்டு வெளியேறி விட்டனர். அதற்கு காரணம் அந்த மகன்தான். அவர் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையாகிவிட்டார். வீட்டில் ஒன்றும் இல்லை எல்லாவற்றையும் விற்பனை செய்துவிட்டார். இது தான் நிலைமை. இப்படி சென்றால் எதிர்காலத்தில் நாடு எங்கிருக்கும் என்று யோசித்து பாருங்கள். அச்சமடைய வேண்டாம். நாட்டிலிருந்து இதை முழுவதுமாக துடைத்தெறிவோம். எந்தவொரு நபருக்கும் மன்னிப்பு இல்லை. திருட்டு, ஊழல், மோசடி இவற்றையும் இல்லாது ஒழிப்போம். அதேபோல சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைக்கும் நடவடிக்கைகளையும் தடுப்போம்-என்றார். (அ)

# பாடசாலை மாணவன் பலி!

கொழும்பு, ஒக். 07

திக்வெல்ல பிரதேசத்தில் இயங்கிவரும் பாடசாலையொன்றின் மாணவர் ஒருவர் நீச்சல் குளத்தில் மூழ்கி மரணித்துள்ளார்.

நீச்சல் குளத்தில் விழுந்த கிரிக்கெட் பந்தை எடுக்கச் சென்றபோதே குறித்த மாணவன் மூழ்கி உயிரிழந்தாகத் தெரியவருகிறது.

குறித்த மாணவர் பாடசாலை மைதானத்தில் ஏனைய மாணவர்களுடன் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தபோது, அதே பாடசாலையின் நீச்சல் குளத்தில் கிரிக்கெட் பந்து விழுந்த நிலையில், அதை எடுக்க முயன்றபோது இந்த விபத்து ஏற்பட்டது.

திக்வெல்ல பிரதேச பாடசாலையொன்றின் 12 ஆம் தரத்தில் கல்வி கற்று வந்த 17 வயதான பாடசாலை மாணவன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சடலம் பதிகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் குறித்து திக்வெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அதிக விலைக்கு அரிசி விற்பனை 135 வர்த்தகர்கள் மீது வழக்குகள்

கொழும்பு, ஒக். 07

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த 100 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் நாடு முழுவதும் நடத்தப்பட்ட சோதனைகளில் 135 வர்த்தக நிலையங்களில் உள்ள வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அதிகார சபை தெரிவித்துள்ளது. அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்பவர்கள் மற்றும் அதை மறைப்பவர்களுக்கு எதிராக சோதனைகள் தொடரும் என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

தனி உரிமையாளர் அதிக விலைக்கு அரிசி விற்று, அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அவருக்கு 100,000 ரூபா முதல் 500,000 ரூபா வரை அபராதம் அல்லது 5 மாதங்கள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என்று அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஒரு தனியார் நிறுவனம் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் நீதிமன்றம் 500,000 ரூபா முதல் 5,000,000 ரூபா வரை அபராதம் விதிக்கலாம், அபராதம் அல்லது சிறைத்தண்டனை அல்லது மேற்கூறிய இரண்டும் விதிக்கப்படலாம்.

அத்துடன் அதிக விலைக்கு விற்பனை செய்த பொருட்களை அதிகாரசபையின் சட்டத்தின் கீழ் அரசுடமையாக்கவும் நீதிமன்றத்தால் முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் இரண்டாவது முறையாகக் குற்றம் செய்தால், அபராதத் தொகையின் இரு மடங்கு அபராதமும், ஒரு வருடம் வரை சிறைத்தண்டனையும் விதிக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை சட்டத்தின் கீழ், நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளதாக அந்த அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு 4,500 இற்கும் மேற்பட்ட முறைப்பாடு

கொழும்பு, ஒக். 07

2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், கையூட்டல் சம்பவங்கள் தொடர்பாக, 4,500 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, குறித்த காலப் பகுதியில் 4,626 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளுக்கு அமைய, 85 தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய 58 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில், பெரும்பாலானோர் பொலிஸ் அதிகாரிகளாவர்.

அத்துடன், நீதி அமைச்சுடன் தொடர்புடைய நிறுவனங்களைச் சேர்ந்த 9 பேரும், மூன்று கிராம உத்தியோகத்தர்களும், இரண்டு பொதுச் சுகாதார பரிசோதகர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதனிடையே, கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் நீதிமன்றங்களில் 61 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம், கடந்த 2024 ஆம் ஆண்டில், கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட 44 வழக்குகள் நிறைவடைந்துள்ள நிலையில், 29 பேர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நீதிமன்றங்களில் மேலும் 276 வழக்குகள் நிலுவையில் இருப்பதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# முத்துநகர் விவசாயிகள் சத்தியாக்கிரக போராட்டம்

## மீண்டும் காலஅவகாசம் கோரல்

திருகோணமலை, ஒக். 07

திருகோணமலை, முத்துநகர் விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களுக்காக தொடர்ந்து 20 ஆவது நாளாக நேற்று திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களது விவசாய காணிகளை தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின் சக்திக்காக தாரை வார்க்கப் பட்டதையடுத்து போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பில் அண்மையில் பிரதமர் அலுவலகம் முன் இடம் பெற்ற போராட்டத்தில் பிரதமருடனான சந்திப்பில் பத்து நாட்களுக்குள் தீர்வு தருவதாக கூறி பத்து நாட்கள் கடந்துள்ள போதிலும் எந்தவித பதிலும் இல்லை எனவும் இம் மாதம் 20ஆம் திகதி வரை காலக்கெடு வழங்குமாறும் பிரதமர் அலுவலகம் தெரிவித்ததாக முத்துநகர் ஒன்றிணைந்த விவசாய சம்மேளனத்தினர் கூறினர். (எ-12)



# மேன்காமம் கிராமத்துக்குள் காட்டு யானை நுழைந்தது!

## வீட்டு தோட்டப்பயிர்களுக்கு சேதம்

திருகோணமலை, ஒக். 07

மூதூர் - மேன்காமம் கிராமத்துக்குள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை உள்நுழைந்த காட்டு யானை அங்கிருந்த வீட்டுத் தோட்டப் பயிர்களை சேதப்படுத்தியுள்ளதாகவும் யானையால் உயிருக்கு அச்சுறுத்தல் நிலவுவதாகவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 05.00 மணியளவில் ஊருக்குள் நுழைந்த காட்டு யானை அங்கிருந்த வாழை, தென்னை மரங்களை சேதப்படுத்திய நிலையில் யானை வெடி கொளுத்தி அதனை துரத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேன்காமம் குளப் பகுதியில் நான்கு காட்டு யானைகள் தங்கி நிற்பதாகவும் அவை இரவு வேளைகளில் ஊருக்குள் வருவதாகவும் இதனால் தோட்டப் பயிர்களுக்கும் மக்களின் உயிர்களுக்கும் பாதுகாப்பு இல்லை எனவும் விவசாய நடவடிக்கையின் போது பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே நெல்லை வெட்டி வீட்டுக்கு கொண்டு வர வேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

எனவே, மேன்காமம் குளப் பகுதியில் நிற்கும் யானைகளை காட்டுக்கு அனுப்புவதற்கு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# கண்டியில் நகை திருட்டு! இளம் தம்பதியினர் கைது

கண்டி, ஒக். 07

கண்டியில் உள்ள ஒரு நகைக் கடைக்குள் நகை வாங்குவதாகக் கூறி உள்ளே நுழைந்து நகைகளைத் திருடியதாகக் கூறப்படும் ஒரு இளம் தம்பதியினரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டியில் உள்ள ஒரு நகைக் கடையிலிருந்து வந்த தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து, கண்டி பொலிஸ் தலைமையகத்தின் குற்றப்பிரிவினர் உடனடியாக அங்கு சென்று, திருடப்பட்ட நகைகளை மறைத்து வைத்திருந்தபோது சந்தேகத்துக்கிடமான தம்பதியினரைக் கைது செய்தனர்.

தலத்துஓயா எதுல்கம பகுதியைச் சேர்ந்த இந்த தம்பதியினர் 20 - 22 வயதுக்குட்பட்டவர்கள் என்று பொலிஸார் கூறினர். அவர்களிடமிருந்து கிடைத்த தகவலின்படி, கண்டி பகுதியில் உள்ள முக்கிய வங்கிகளில் அடகு வைக்கப்பட்டிருந்த நகைகளின் ஒரு பங்கு மீட்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ஜோடி வேறு ஏதேனும் நகைக் கடைகளுக்கு சென்றுள்ளதா? என்பதைக் கண்டறிய பொலிஸ் விசாரணைகள் நடந்து வருகின்றன. (எ)

# கட்டாக்காலி கால்நடைகள் அதிகரிப்பு

மட்டக்களப்பு, ஒக். 07

கோறளைப்பற்று - வாழைச்சேனை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக பிரதேச சபை தவிசாளர் எஸ். சுதாகரன் தெரிவித்தார்.

இவ்வாறு கட்டாக்காலியாக வீதிகளில் திரியும் ஆடு, மாடு போன்ற கால்நடைகளால் தொடர்ந்தும் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அத்துடன், காட்டாக்காலி கால்நடைகள் வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் பாதசாரிகளுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகின்றன.

எனவே, ஆடு, மாடு வளர்ப்பாளர்கள் தங்களுடைய கால்நடைகளை வீதிகளில் விடாமல் தங்களுடைய வீடுகளில் வளர்க்குமாறும் அல்லது மேய்ச்சல் நிலங்களுக்கு அனுப்பி அதனை பராமரிக்குமாறும் தவிசாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த அறிவுறுத்தலை மீறி கால்நடைகளை வீதிகளில் விடும் உரிமையாளர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தவிசாளர் தெரிவித்தார். (எ)



# சுவாமி விபுலானந்தரின் நினைவு விழா

மட்டக்களப்பு, ஒக். 07

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம், பிரதேச ஆலயங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுடன் இணைந்து ஏற்பாடு செய்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் நினைவு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் உ. உதயசிறிதர் தலைமையில் கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கோட்டைக்கல்லாறு கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமான பண்பாட்டு ஊர்வலமானது, ஊர் வீதிகள் ஊடாக கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தை சென்றடைந்ததும் பிரதேச செயலாளரால் சுவாமி விபுலானந்தரின் திருவுருவப்படத்துக்கு மாலை அணிவித்தல் மற்றும் பூசை நிகழ்வுடன் பிரதான நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது அறநெறிப்பாடசாலை மாணவர்களால் சுவாமி விபுலானந்தர் தொடர்பான கதாப்பிரசங்கம், பேச்சு, பாடல், நாடகம் மற்றும் வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்வுகளும் ஆற்றுகை செய்யப்பட்டன. (எ)

# கிழக்கு, மத்திய மாகாணங்களில் பலத்த மழை பெய்யக்கூடும்

கொழும்பு, ஒக். 07

வடக்கு, வடமத்திய, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யும். அத்துடன், கடும் காற்று மற்றும் பலத்த மின்னல் காரணமாக ஏற்படும் ஆபத்துகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அந்த திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் 01.00 மணிக்குப் பிறகு மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் சில இடங்களில் மழை பெய்யக்கூடும் என குறித்த திணைக்களம் அறிவித்துள்ளது. (எ)

# 100 கடற்கரை பூங்காக்களை அமைக்கும் திட்டம் ஆரம்பம்

பொத்துவில், ஒக். 07

அரசாங்கத்தின் கிளீன் சிறீ லங்கா வேலைத்திட்டத்தின் கீழ் 100 பசுமையான கடற்கரை பூங்காக்களை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவால் அம்பாறை, பொத்துவில் பிரதேசத்தில் முதற்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ)

# இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம்

தம்பலகாமம், ஒக். 07

கிழக்கு மாகாண ஆயுர்வேத திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் இன்று நடைபெறவுள்ளது. இதில் சிரேஷ்ட ஆயுர்வேத வைத்திய நிபுணர், தேர்ச்சி பெற்ற ஆயுர்வேத வைத்தியர்களும் சிகிச்சை அளிப்பதற்காக வருகை தரவுள்ளனர்.

இவ்வைத்திய முகாமில் பின்வரும் சிகிச்சை முறைகள் இடம் பெற உள்ளன. குறித்த இலவச மருத்துவ முகாமானது இன்று காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 02. 00 மணி வரை முள்ளிப் பொத்தானை -அக்ரபோதிய விகாரையில் நடைபெறவுள்ளது. (எ-12)

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதான இருவரிடம் அதிரடிப் படை விசாரணை

அம்பாறை, ஒக். 07

அம்பாறை மாவட்டம் - பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஒரு தொகை பணத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை விசேட அதிரடிப் படை புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கல்முனை விசேட அதிரடிப் படையினர் குறித்த கைது நடவடிக்கையை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு முன்னெடுத்தனர்.

ஐஸ் 760 மில்லி கிராம் உட்பட ஒரு தொகை பணமும் குறித்த சந்தேக நபரிடம் இருந்து மீட்கப்பட்டது. கைதானவர் பெரிய நீலாவணை பகுதி வீ.சி. வீதியை சேர்ந்த 36 வயதுடைய வராவார். இதற்கு முன்னரும் இச் சந்தேக நபர் கடந்த ஒரு தடவை போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைதானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனைக்குடி -3 பிரிவு கடற்கரை வீதியிலுள்ள பள்ளிவாசல் அருகில் 27 வயதுடைய சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருளுடன் கல்முனை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

இச்சந்தேக நபர் வசம் இருந்து ஐஸ் 1800 மில்லி கிராம் மீட்கப்பட்டது. குறித்த சந்தேக நபர் இனிப்பு வியாபாரி போன்று நடமாடி போதைப்பொருளுடன் கைதானதாக கல்முனை விசேட அதிரடிப் படையினர் குறிப்பிட்டனர்.

சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த கல்முனை விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 772 வீடுகள் நேற்று திறந்து வைக்கப்பட்டன.

44.48 கோடி இந்திய ரூபாய் செலவில் இந்த வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழகத்தில் வாழும் இலங்கை ஏதிலிகளுக்காக, பத்தாயிரத்து 469 வீடுகளை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்காக 629 கோடி இந்திய ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (அ)

## வாக்கெடுப்பி...

வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் எனும் தலைப்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

ஏற்கனவே கடந்த மாத ஆரம்பத்தில் இந்தப் பிரேரணையின் முதலாவது வரைவு சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் அதில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

அந்த வகையில் திருத்தப்பட்ட இறுதி வரைவு நேற்று சமர்ப்பிக்கப்பட்டு, நேற்றைய தினமே நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை மீதான மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அதிகாரத்தை நீடிக்கும் தீர்மானத்துக்கு, அதனை முன்வைக்கும் பிரதான 5 நாடுகளுக்கும் மேலாக மேலும் 22 நாடுகள் இணை அனுசரணை வழங்கின.

பிரிட்டன் தலைமையில் கனடா, மலாவி, மொன்டினீக்ரோ மற்றும் வட மசிடோனியா ஆகிய இணையனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்ட இந்தப் புதிய பிரரேணையின் முதலாவது வரைவு கடந்த செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இந்தப் பிரரேணை நிறைவேற்றப்படும்போது இலங்கை அரசாங்கம் வாக்கெடுப்பைக் கோராமல் இருக்க தீர்மானித்திருந்தது.

ஆனால், இலங்கை அரசாங்கம் இந்த பிரரேணையையும் சர்வதேச தலையீட்டையும் தொடர்ந்து மறுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## அரசாங்கம்...

கம்யூனிஸ்ட் அரசாங்கம் செய்தது போல் முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதன் மூலம் தாமதமின்றி முதலீட்டாளர்களை நாட்டுக்கு அழைக்க வேண்டும்.

அரசாங்கம் வலுவடைந்து வருகிறது. எதிர்க்கட்சி நாளுக்கு நாள் பலவீனமடைந்து வருகிறது.

தற்பொழுது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொய் சொல்லவில்லை.

வரலாற்றில் ஒருபோதும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொள்ள முடியாது என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியிருந்த நிலையில் இம்முறை தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமோக வெற்றியை ஈட்டியது.

கடந்த கால அரசாங்கங்களின் பலவீனங்கள், மோசடிகள் காரணமாக அவர்கள் தோல்வியடைந்தனர்.

உண்மையில் இந்த அரசாங்கம் பொய்யுரைக்கவில்லை. கடந்த அரசாங்கங்களில் இருந்தவர்கள் பொய்யுரைத்த காரணத்தினால் தோல்வியை தழுவினார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கு வழங்கிய வாக்குகளில் 60 வீதமானவை ஜனாதிபதி அநுரவுக்கு கிடைத்தன. பொதுத் தேர்தலில் இந்த வாக்குகள் மேலும் பெருவாரியாக அதிகரித்தது-என்றார். (அ)

## மன்னார் ...

அறிந்து கொண்ட பிரதேச மக்கள் குறித்த பகுதிக்கு சென்று வருகை தந்த குழுவினருடன் கருத்து முரண்பாட்டில் ஈடுபட்டனர்.

இதன்போது பேசாலை பொலிஸாரும் அவ்விடத்துக்கு சென்ற நிலையில் அங்கு பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

மேலும் காற்றாலை திட்டத்தை செயல்படுத்துவதற்கான மணல் ஆய்வு முன்னெடுக்க இயந்திரங்கள் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மக்களின் தொடர் எதிர்ப்பை தொடர்ந்து வந்த குழுவினர் அவ்விடத் தில் இருந்து பின்வாங்கிச் சென்றுள்ள தாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## இலங்கையில்...

ஏற்படுத்துவதாகவும், மொத்த மருந்து செலவில் கிட்டத்தட்ட 30 சதவீதம் புற்றுநோய் மருந்துகளுக்கு ஒதுக்கப்படுகிறது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மேலும் புற்றுநோய் மருந்துகளின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தாலும், அவற்றின் செலவுகள் மிக அதிகம் என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையர்களில் 30 முதல் 70 வயதுக்குட்பட்டவர்களுக்கிடையில் ஏற்படும் பெரும்பாலான மரணங்களுக்குத் தொற்றுநோயல்லாத நோய்கள் காரணமாக இருப்பதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அதனால், புற்றுநோய் மற்றும் பிற தொற்றாத நோய்களின் அதிகரித்து வரும் நிகழ்வுகளைத் தடுப்பு, ஆரம்ப கால கண்டறிதல் மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துமாறு அவர் பொதுமக்களை வலியுறுத்தினார். (அ)

## அரசியல்...

தீர்மானத்துக்கமையவே பொலிஸ்மா அதிபர் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர விசனம் வெளியிட்டார்.

குருநாகலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்தின் ஊடாக பொலிஸ் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு சுயாதீனமாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய வெவ்வேறு காரணிகள் தொடர்பில் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இடமாற்றம், நியமனங்கள் உள்ளிட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், தற்போது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் நியமனங்களில் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றன.

அரசியலமைப்பின் ஊடாக தமக்காக உறுதிப்படுத்தப்பட்ட சுயாதீனத்தன்மையை பொலிஸ் ஆணைக்குழு கைவிட்டுள்ளது. அரசாங்கத்தின் அழுத்தத்தின் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் எதற்காக இவற்றை அனுமதிக்கின்றார்? தற்போது சகல அதிகாரங்களும் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டு 17ஆவது திருத்தத்துக்கு முன்னர் காணப்பட்டதைப் போன்று பொலிஸ் முழுமையாக அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தேவைக்கேற்பவே பொலிஸ்மா அதிபர் செயற்படுகின்றார். தற்போது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் நாளுக்கு நாள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். பொருத்தமற்றவர்கள் பதவிகளில் நியமிக்கப்படுகின்றனர். விரைவில் இது தொடர்பில் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக நாம் நடவடிக்கை எடுப்போம்-என்றார். (அ)

# பாலின சமத்துவ தரவரிசையில் இலங்கை பெரும் பின்னடைவு!

ஜெனீவா, ஒக். 07

சர்வதேச ரீதியில், பாலின சமத்துவத்தில், இலங்கை பின்னடைவில் உள்ளதாக, ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் பாலின சமத்துவம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் திட்டத்தால் நடத்தப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் தீர்மானங்களும், பரிந்துரைகளும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பொருளாதார வலுவூட்டல், ஆட்சி மற்றும் தீர்மானம் எடுப்பதில் பெண்களின் தலைமைத்துவம், பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையைத் தடுத்தல் ஆகிய துறைகளில் அடிப்படைக் கவனம் செலுத்தி குறித்த ஆய்வு நடத்தப்பட்டதாக, இந்தத் திட்டத்தின் பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, உலகளாவிய சூழ்நிலையில் இலங்கையின் பாலின சமத்துவத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதை அடையாளம் காண முடிந்ததாக அந்தப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், 2006 ஆம் ஆண்டில், இலங்கை 115 நாடுகளில் 18 ஆவது இடத்தில் இருந்துள்ளது.

எனினும், 2025ஆம் ஆண்டில் இலங்கை 148 நாடுகளில் 130வது இடத்தில் இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும், பிராந்தியத்தில் மிகவும் செல்வாக்குமிக்கவர்களில் சில பெண்கள் உள்ள போதிலும், ஆண்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க சமத்துவமின்மை அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகிந்தவின்...

இராஜதந்திர சிறப்புரிமைகளைப் பயன்படுத்தியா அல்லது நன்கொடையாக வழங்கும் அடிப்படையிலா இந்த உதவி வழங்கப்படவுள்ளதென்பது பற்றி இன்னும் தெரிய வரவில்லை.

எவ்வாறாயினும் சம்பந்தப்பட்ட இரண்டு நாடுகளின் தூதுவர்கள் இது தொடர்பில் மகிந்தவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு மகிந்த தரப்பிலிருந்து இதுவரை பதில் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபருடன் அடுத்த வாரம் சந்திப்பொன்றினை நடத்த பொதுஜன பெரமுன முடிவு செய்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வாகனங்களை அரசாங்கம் கையகப்படுத்தியுள்ளதால், அவருக்கு பாதுகாப்பு வழங்குவதில் கடுமையான சிக்கல் ஏற்பட்டுள்ளதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே கூறியுள்ளார். (அ)

## உதய கம்மன்...

நடைபெற்ற மத நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலின் போது தேர்தலில் போட்டியிடாமலே தோல்வியை அறிந்து விலகிக் கொண்டவர்கள் இன்று தேசப்பற்றாளர்கள் போல் பேசுகிறார்கள். இந்த நாடு இனவாதத்தால் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. அதற்கு இவர்கள் பொறுப்பு கூறவேண்டும்.

உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ ஆகியோர் இன்றும் கடந்த அரசாங்கம் தான் ஆட்சியில் உள்ளது என்று நினைத்துக் கொண்டு செயற்படுகிறார்கள். போலியான விடயங்களை சமூகமயப்படுத்த முயற்சிக்கும்போது அந்த விடயங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு முன்னிலையாகவேண்டும்.

இனவாதத்தை முன்னிலைப்படுத்தி இழந்த அரசியல் செல்வாக்கை மீண்டும் கைப்பற்ற இவர்கள் முயற்சிக்கிறார்கள். நாட்டு மக்கள் இதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள். மக்கள் மத்தியில் தவறான விடயத்தை சமூகமயப்படுத்த இடமளிக்க முடியாது-என்றார். (அ)

## ஈஸ்டர்...

கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈஸ்டர் தாக்குதலுடன் பிள்ளையானுக்கு தொடர்புகள் இருப்பதாகத்தான் ஏற்கனவே கூறியுள்ளேன். ஆனால், அவருக்கு நேரடியான தொடர்புகள் இருப்பதாகவும் அவரே தாக்குதலை நடத்திய தாகவும் நான் கூறவில்லை.

இந்தத் தாக்குதலை சஹ்ரான் உள்ளிட்ட குழுவினர் நடத்தியதை அனைவரும் அறிவார்கள். ஆனால், இந்தத் தாக்குதலுக்கான சூழ்ச்சிகளுடன் பிள்ளையானுக்கு தொடர்பு இருக்கின்றது.

அதற்மைய, இந்தத் தாக்குதலுக்கு யார் ஆதரவு வழங்கியது, இதற்குப் பின்னால் யார் இருக்கின்றது என்பதையே நாம் கண்டறிய வேண்டியுள்ளது. இது வொரு சூழ்ச்சி என்பது அனைவருக்கும் தெரியும். இதற்குப் பின்னால் அரசியல் தொடர் புகள் இருக்கின்றதா என்பதை நாம் ஆராய்ந்து வருகிறோம் -என்றார்.

## எங்களுடைய...

முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சட்ட விரோதமாக தனியார் காணிகளை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட திஸ்ஸ விகாரையை அகற்றும் மாறும் இப்பிரதேச மக்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரும் ஒவ்வொரு பௌர்ணமி தினமும் போராடிக் கொண்டு இருக்கின்றனர். இந்த புதிய ஆட்சி ஒரு வருடம் நிறைவுபெற்றதன் பின்னரும் ஆராய்கி றோம் ஆராய்கிறோம் எனக் கூறி கடந்த சிங்கள பௌத்த ஆட்சியாளர்களை போலவே நாங்களும் இருக்கின்றோம் என எமக்கு தெளிவாக புரிய வைக்கின்றனர்.

ஆனாலும் இப்பொழுது விகாரையை அகற்ற முடியாது எனக் கூறும் நிலைமை காணப்படுகிறது. இதனை பற்றி தீர்மானிக்கவே இவ்வளவு காலம் எடுப்பது என்றால் ஆக்கிரமிப்பை தொடர்ந்து நடத்தும்போது பொது மக்கள் களைப்படைவார்கள், இல்லை இதனை கைவிடுவார்கள் எனும் எண்ணத்தில்தான் இழுத்தடிக்கிறார்களா என தெரியவில்லை.

ஆனால் எமது பொது மக்கள் தொடர்ந்து போராடுவார்கள். இந்த சிங்கள பௌத்த ஆட்சியாளர்களின் சட்ட விரோத நடவடிக்கைக்கு எதிராக எந்த பகுதியில் இருந்தாலும் பரவாயில்லை. மக்களை திரட்டி அதற்கான எதிர்ப்புகளை தெரிவிப்போம்.

அது ஒன்று தான் தமிழ் மக்களின் விடுதலை மற்றும் சுதந்திரத்தை பெறுவதற்கான வழியாக இருக்கும் என நம்பித்தான் இந்த போராட்டத்தில் நாம் தொடர்ந்து பங்கு பற்றிக்கொண்டு இருக்கின்றோம்.

ஆகவே இந்த தேசிய மக்கள் சக்தியின் புதிய திசைகாட்டி சரியான வழியை காட்டும் என நம்பி எமது மக்கள் ஏமாந்துள்ளார்கள். ஆனால் இப்போது அந்த திசைகாட்டி அதலபாதாளத்தை நோக்கி கொண்டு இருப்பதை மக்கள் மெல்ல மெல்ல புரிந்து கொண்டு இருக்கின்றார்கள் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# முந்தைய அரசாங்கங்களை விட இந்த அரசு 1000 மடங்கு சிறந்தது!

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 07

**ஒரு சில குறைப்பாடுகள் இருந்தாலும் கூட ஏற்கனவே இருந்த அரசாங்கங்களை விடவும் தற்போதைய அரசாங்கம் ஆயிரம் மடங்கு சிறந்தது என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். நேற்று முன் தினம் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குற்றவாளிகளை பாதுகாக்காமல் இருப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு முதுகெழும்பு உள்ளது. குற்றம் செய்தவர் பண பலத்தை பயன்படுத்தி பின்வாசல் வழியாக தப்பிச் செல்வதற்கு இதற்கு முன்னர் சந்தர்ப்பம் காணப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் வந்தவுடன் பின்வாசலை மூடிவிட்டனர். எனவே குற்றவாளிகளுக்கு எங்கும் தப்பிச் செல்ல முடியாது. அதேபோல சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியையும் மேற்கொண்டு வருகின்றனர். எனவேதான், நூற்றுக்கு நூறு வீதம் அது முழுமை பெறாமல் இருந்தாலும் ஏற்கனவே இருந்த அரசாங்கங்களை விடவும் ஆயிரம் மடங்கு இந்த அரசாங்கம் சிறந்தது என்று நான் கூறுகிறேன். இந்த ஊழல்வாதிகளை சர்வதேச ரீதியில் கொண்டுச்சென்று நிர்வகிப்பது ராஜபக்ஷர்கள். அப்பா, மகன், அண்ணன், தம்பி, மாமா எல்லோரும் இணைந்து இந்த ஊழல் வலையமைப்பை நிர்வகிக்கின்றனர். இதன் காரணமாகத்தான் நாட்டில் ஊழல் மோசடிகள் எல்லையைக் கடந்து சென்றுள்ளன. அவ்வளவு ஏன் இவர்களின் ஊழல் மோசடியை வெளிக்கொணர்ந்தால் புறக்கோட்டையில் உள்ள ஒரு கருவாடு வர்த்தகர் கூட சிக்கிக்கொள்வார். நாட்டுக்கு கிழங்கு இறக்குமதி செய்யும் வர்த்தகர் அல்லது பருப்பு இறக்குமதி செய்யும் வர்த்தகர் இருப்பாராயின் அவர்களும் இந்த ஊழல்வாதிகளின் வலையமைப்புக்குள் சிக்கிக்கொள்வர். ஊழல் செய்து பழகிய இவர்களுக்கு புலி இரத்தத்தை காண்பது போலதான் இவர்களுக்கு ஊழல் என்பது. 1000 சிறைச்சாலைகளுக்குள் இவர்களை அடைத்தாலும் திருந்தப் போவதில்லை-என்றார். (அ)

கந்தானையில் கண்டுபிடிக்கப்பட்ட

# இரசாயன பொருட்களின் ஆய்வறிக்கை விரைவில்!

கொழும்பு, ஒக். 07

கந்தானையில் கண்டுபிடிக்கப்பட்ட இரசாயனப் பொருட்கள், ஐஸ் அல்லது மெத்தம்பெட்டமைன் என சந்தேகிக்கப்படுகின்ற நிலையில், அவை தொடர்பான ஆய்வறிக்கையை இந்த வாரத்திற்குள் வெளியிடப்படும் என தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், கைப்பற்றப்பட்ட இரசாயனப் பொருட்களின் ஆய்வக சோதனைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது

இதேவேளை மித்தெனிய மற்றும் தங்காலையில் உள்ள நெடோல்பிட்டிய பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டவை, ஐஸ் எனக் கூறப்படும் மெத்தம்பெட்டமைன் எனத் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை உறுதிப்படுத்தியதுடன் வெலிகம பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட போதைப்பொருள் மிகவும் ஆபத்தான போதைப்பொருள் எனவும் அச்சபை கூறியுள்ளது. (அ)

# தபால்மா அதிபர் வெளியிட்ட கருத்துக்கு தபால் தொழிற்சங்க ஒன்றியம் எதிர்ப்பு!

கொழும்பு, ஒக். 07

அஞ்சல் ஊழியர்கள் முறைக்கேடாக மேலதிக கொடுப்பனவை பெற்றுள்ளதாக தபால்மா அதிபர் வெளியிட்ட கருத்துக்கு கடும் அதிருப்தி தெரிவிப்பதாக தபால் தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அதன்படி, தபால்மா அதிபர் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், எதிர்வரும் 9 ஆம் திகதி கறுப்புப்பட்டி அணிந்து பணிக்கு வருவோம் என தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் ஜி.ஜி.சி. நிரோஷண தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, எந்தவொரு விசாரணையும் இல்லாமல் தபால்மா அதிபரால் பணியாளர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை கடுமையாக எதிர்ப்பதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

சமீபத்தில் ஹப்புத்தளையில் நடைபெற்ற விழாவில் பங்கேற்ற தபால்மா அதிபர் ருவன் சத்குமார, தபால் துறை ஊழியர்கள் தங்கள் கைரேகையைப் பதிக்காமல் கோடிக்கணக்கான மேலதிக கொடுப்பனவுகளை பெற்றுள்ளதாகவும், தபால் சேவையில் நிகழும் பல முறைகேடுகள் குறித்தும் கருத்து வெளியிட்டிருந்த நிலையிலேயே குறித்த கருத்து தொடர்பில் கடும் அதிருப்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# காட்டிக்கொடுக்கும் அரசியல் ஒருபோதும் செய்யமாட்டோம்

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஒக். 07

நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக கொள்கைகளை காட்டிக்கொடுக்கும் அரசியலை நாங்கள் ஒருபோதும் செய்யமாட்டோம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரத்தினபுரி பகுதியில் இடம்பெற்ற மாவட்ட நிர்வாகிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலில் வெற்றி பெற்றாலும் தோல்வியடைந்தாலும் நாங்கள் எங்கள் கொள்கையைப் பாதுகாத்துள்ளோம். தேர்தலில் வெற்றி பெறுவதற்காக சில அரசியல் கட்சிகள் தங்களது கொள்கைகளை மாற்றிக்கொண்டுள்ளன. பொய் கூறுகின்றனர். அவர்களின் நோக்கம் தேர்தலில் வெற்றி பெறுவது மாத்திரமே. கட்சியை கட்டியெழுப்புவதோ, மக்களுக்கு சேவை செய்வதோ அல்லது நாட்டை அபிவிருத்தி செய்வதோ எந்த தேவையும் இல்லை. கட்சி சீரழிந்து விடும். அரசாங்கம் வீழ்ச்சியடையும். எனவேதான் கட்சி என்ற ரீதியில் நாங்கள் மக்களை ஏமாற்ற நினைப்பதில்லை. எங்களால் செய்ய முடிந்தவற்றை சொல்ல வேண்டும் அதேபோல செய்ய முடியாதவற்றையும் கூறவேண்டும். இதுவரை 13ஆவது திருத்தச் சட்டத்தை தருகிறோம் என்று கூறிய எவரும் இதுவரை மாகாண சபைத் தேர்தலை நடத்தவில்லை. மகிந்த ராஜபக்ஷ மாத்திரமே வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தினார். அதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகளுக்கும் யுத்தம் காரணமாக மாகாண சபை தேர்தலை நடத்த முடியாமல் போனது. யுத்தத்தை நிறைவு செய்து கொடுத்த பின்னரும் கூட 3 ஜனாதிபதிகளுக்கும் மாகாண சபை தேர்தலை நடத்த முடியாமல் போயுள்ளது-என்றார். (அ)

# நாட்டில் ஏற்படும் மருந்து பற்றாக்குறைக்கு பிரித்தானிய காலச் சட்டங்களும் காரணம்!

கொழும்பு, ஒக். 07

மருந்துகளின் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பதற்கான வழிமுறைகள் தற்போதுள்ள சட்ட நடைமுறைகளால் தடைப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்

அதன்படி, சில சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் பிரித்தானிய காலத்தைச் சேர்ந்தவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு சுமார் இரண்டு கோடி ரூபாய் பெறுமதி கொண்ட மருத்துவ உபகரணங்கள் நன்கொடையாக வழங்கி நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசப் பணிகளை, நூறு மீற்றர் ஓடுவது போல மிக விரைவாகச் செய்ய முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மருந்துப் பற்றாக்குறைக்குத் தீர்வு காண்பதில் தற்போதுள்ள சில சட்டங்கள் தடையாக இருகின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அந்தச் சட்டங்களை மாற்றுவது சிக்கலாக இருக்கலாம் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள சில சட்டங்களைப் பின்பற்றுவதன் மூலம் சில அவசர பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அடுத்த 10 ஆண்டுகளுக்கு மருத்துவமனைகளுக்கு தேவையான அத்தியாவசிய உபகரணங்கள் தொடர்பான தரவுகளை பெற்றுக்கொள்ள சுகாதார அமைச்சு சிறப்பு திட்டத்தை தயாரித்து வருவதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வலியுறுத்தியுள்ளார். (அ)

# ஆசிரியர்களை ஒடுக்கும் சட்டங்கள் தேவையில்லை!

கொழும்பு, ஒக். 07

ஆசிரியர்களை ஒடுக்கும் வகையில் சட்டங்கள் கொண்டுவரப்படும் பட்சத்தில் சிறந்த மனிதவளத்தை உருவாக்க முடியாது என தேசிய கல்வி ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பத்மினி ரணவீ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு ஆசிரியரின் பங்கு நிறைவேற, அவர் பெற வேண்டிய ஆதரவு அவசியம். ஒரு படைப்பாற்றல்மிக்க ஆசிரியரை உருவாக்க வேண்டும். ஆசிரியர் எப்போதும் சட்டங்களாலும் விதிமுறைகளாலும் ஒடுக்கப்பட்டவராகவே உள்ளார்.

ஒரு ஆசிரியர் ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்தால், அதாவது சட்டங்களாலும் விதிகளாலும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பின், அவர் தனது வேலையை நன்றாகச் செய்ய முடியாது. எனவே, ஆசிரியர் ஒரு சுதந்திரமான மனதுடன் மகிழ்ச்சியாக பணியாற்ற, அவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

ஒரு ஆசிரியரின் பங்கு என்பது மனித வளத்தை உருவாக்குவதாகும். நாட்டுக்காக மனித வளத்தை உருவாக்க, ஆசிரியரைச் சுற்றி வேலியைக் கட்ட முடியாது. ஏனெனில் சில நேரங்களில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதிருக்கும். நான் உடலியல் ரீதியான தண்டனைகளை ஏற்கவில்லை. ஆனால், குழந்தைகள் தவறு செய்திருக்கிறார்கள், அதற்கான விளைவுகள் இருப்பதைக் குழந்தைகள் உணர வேண்டும். அது ஒரு பரஸ்பர புரிதலாக இருக்க வேண்டும்.

உடலியல் ரீதியான தண்டனை என்பது நம் நாட்டில் நீண்ட காலமாக தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே, இன்னொரு சட்டம் தேவையில்லை என நினைக்கிறேன். அதனால் இப்போது என்ன செய்ய வேண்டும் என்றால், முன்பே சொன்னது போல, பரஸ்பர புரிதல் இருக்க வேண்டும்.

பாடசாலைகளில் நிர்வாகம் இருக்கிறது, சரியான பாடசாலை அமைப்பும் இருக்கிறது. அந்த அமைப்புக்குள், இந்த பொறுப்பை யார் ஏற்க வேண்டும் என்பதை பாடசாலை தீர்மானிக்க வேண்டும். அதிபர் இருக்கிறார், பாடசாலை நிர்வாகம் அந்த பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த பரஸ்பர புரிதலுடன், பாடசாலை நிர்வாகத்திற்கு சுதந்திரமும் பொறுப்பும் இரண்டும் இருக்க வேண்டும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org